# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:-15 தேதி 29.05.2010

## மத்திய சங்க கட்டிட நிதி

அன்பார்ந்த தோழர்களே,

1,35,000 ஊழியர்களைக் கொண்டு, தொடர்ந்து மூன்றாவது முறையாக அங்கீகாரம் பெற்று, ஊழியர்களுக்கு பல்வேறு நன்மைகளை பெற்றுத் தந்து வரும் நமது அகில இந்திய சங்கம் மிகக் குறுகிய இடத்தில் குறைந்த பட்ச வசதி கூட இல்லாமல் செயல்பட்டு வருகிறது. மத்திய சங்கத்தில் பணிபுரிய வரும் நமது சங்க நிர்வாகிகள் தங்குவதற்கு போதுமான இடம் இல்லாததால் நாம் அவர்களை ஓட்டல்களில் தங்க வைக்க வேண்டி உள்ளது. இந்தியாவின் மற்ற பகுதிகளில் இருந்து டெல்லிக்கு வரும் நமது தோழர்களில் ஒரு சிலரைக்கூட தங்க வைக்கும் வசதி இன்றி உள்ளது. தாதாகோஷ் பவனில் நாம் தங்கி இருப்பதனை எதிர்த்து தோழர். ஓம் பிரகாஷ் குப்தா நம் மீது தொடர்ந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

எனவே, நமது மத்திய சங்கத்திற்கென ஒரு சொந்தக் கட்டிடத்தினை வாங்குவது அவசியம் என பல காலமாக பரிசீலிக்கப்பட்டு வந்தது. 2009, ஆகஸ்ட்டில் நடைபெற்ற மைசூர் மத்திய செயற்குழு நமது அகில இந்திய சங்கத்திற்கென ஒரு கட்டிடத்தை புது டெல்லியில் வாங்குவது என முடிவு செய்தது. இதனை திருவனந்த புரம் அகில இந்திய மாநாடும் அங்கீகரித்துள்ளது.

நமது திருவனந்தபுரம் அகில இந்திய மாநாடு, ஊதிய மாற்ற நிலுவை வழங்கப்படும் சமயத்தில் 600/-ரூபாய் நன்கொடை வழங்க வேண்டும் என அனைத்து ஊழியர்களையும் கேட்டுக் கொண்டுள்ளது. அதனை கிளை, மாவட்ட, மாநிலச் சங்கங்களுக்கு தலா ரூ.100/-ம், மத்திய சங்க கட்டிட நிதியாக ரூ.300/-ம் என பிரித்து கிளைச் சங்கங்கள் அனுப்ப வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. மத்திய சங்க கட்டிட நிதியினை மாநிலச் சங்கத்தின் மூலம் அனுப்ப வேண்டும் என மாநில சங்கம் தெரிவித்துள்ளதையும் உங்களின் நினைவிற்கு கொண்டு வருகிறோம்.

புதிய ஊதிய விகிதத்தில் மே மாத சம்பளம் அனைவருக்கும் வழங்கப் பட்டுள்ளது. ஜூன் முதல் வாரத்தில் அனைவருக்கும் ஊதிய மாற்ற நிலுவைத் தொகை பட்டு வாடா செய்யப்படும். அந்த சமயத்தில் அனைத்து உறுப்பினர்களையும் சந்தித்து நன்கொடை வசூலித்து உடனடியாக மேல்மட்டங்களுக்கு அனுப்பிட மாவட்ட செயலர்களும், மாநில சங்க நிர்வாகிகளும் கருத்துடன் செயல்பட வேண்டும் என மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**M.முருகையா,**
**மாநில செயலர்(பொறுப்பு)**